2013 ஏப்ரல் 22]

இயங்கி வருகின்றன. அவற்றில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த 3 அலுவலகங்களுக்கும் இடம் கிடைக்கப்பெற்றவுடன், மாண்புமிகு அம்மாவுடைய அரசு இந்த நிதியாண்டிலேயே நிச்சயமாக கட்டித் தருவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.

திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்ட உடனே இந்த ஆண்டிலே கட்டித் தருவோம் என்று அறிவித்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 291, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

291—

வீட்டுமனைப் பட்டா

***10275—திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, கருவந்தா கிராமத்திலுள்ள அருந்ததிய ஏழைக் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், கருவந்தா கிராமத்தில் அருந்ததியர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அக்கிராமத்தில் தகுதியான புறம்போக்கு நிலங்கள் ஏதும் இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்கள் அனைவருக்கும் வீட்டுமனைப் பட்டா அளிக்க வேண்டும் என்பதனை முக்கியக் கொள்கையாகக் கொண்டு முனைப்புடன் செயல்படுவதால், வரும் ஆண்டுகளில் தனி நபர் பேச்சுவார்த்தைமூலம் நிலம் தேர்வு செய்து, கருவந்தா கிராமத்தில் உள்ள தகுதியான நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு சமத்துவ மக்கள் கட்சியின் தலைவர் திரு. ரா. சரத்குமார் அவர்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தென்காசி தொகுதிக்குட்பட்ட ஆலங்குளம் ஒன்றியம், கருவந்தா கிராமத்தில் சுமார் 3,000 மக்கள் வசித்து வருகின்றனர். இக்கிராமத்தில் அருந்ததியினர் இனத்தைச் சேர்ந்த 25 குடும்பங்கள் வசித்து வருகின்றன. அங்குள்ள மக்கள் வேளாண்மை மற்றும் பீடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள். இப்பகுதியிலுள்ள ஏழையெளிய அருந்ததியர் குடும்பங்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கிட தகுதியான புறம்போக்கு நிலங்கள் இல்லாதிருக்கும் வேளையில், தனி நபர் பேச்சுவார்த்தை மூலமாக நிலம் கையகப்படுத்திட துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு, நிலத்தைக் கையகப்படுத்தி வீட்டு மனைகள் வழங்கிட அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக சமத்துவ மக்கள் கட்சித் தலைவர் சார்பாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

2013 ஏப்ரல் 22]

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012–2013 ஆம் ஆண்டு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ் திருநெல்வேலி மாவட்டத்திற்கு ரூ.15 இலட்சம் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சேரன்மகாதேவி கோட்டம், தெற்கு வீரவநல்லூர் கிராமத்தில் சர்வே எண் 250/2–ல் தனியார் பேச்சு வார்த்தைமூலம் ஒரு ஏக்கர், ஒரு சென்ட் நிலம் கையகப்படுத்தப்பட்டு, 30 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்குப் பட்டா வழங்கப்படவுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கிய நிதிமூலம் தனி நபர் பேச்சுவார்த்தைமூலம் எடுக்கப்பட்டு, கருவந்தா கிராம அருந்ததியர் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 292, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

292—

போக்குவரத்துப் பணிமனை

***6805—திரு. க. தினகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சூலூரில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர் சார்பாக சூலூரில் அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். சூலூரில் இரண்டு ஏக்கர்